## பத்திரிக்கைக் செய்தி

அரசாணை (நலை ) எண். 86, சமூகநலம் மற்றும் சத்துணவுத்திட்டத்துறை நாள்.25.11.2016–ன்படி, தமிழ்நாடு அரசு, சமூகப்பாதுகாப்புத்துறையின் கீழ்இயங்கும் 7 அரசு 7 அரசினர் கூர்நோக்கு இல்லங்கள் (சென்னை, திருநெல்வேலி, தஞ்சாவூர், திருச்சி, சேலம், கடலூர், மதுரை மற்றும் கோயம்பத்தூர்) மற்றும் இரண்டு அரசினர் சிறப்பு இல்லங்களில் (சென்னை மற்றும் காஞ்சிபுரம்) தங்கியுள்ள சிறுவர்கள் / சிறுமியர்களுக்கு ஆற்றுப்படுத்துதல் (Counselling) சேவை வழங்க ஆணை வழங்கப்பட்டதை தொடர்ந்து, அரசாணை (ப) எண்.188, சத்துணவுத்திட்டத்துறை நாள்.12.09.2019–ன்படி **வேலூர், அரசினர் பாதுகாப்பு இடத்தில்** தங்கியிருக்கும் இளவர்களுக்கு அற்றுப்படுத்துநர்கள் மூலம் ஆற்றுப்படுத்துதல் (Counselling) சேவை வழங்க ஆணை வழங்கப்பட்டுள்ளது. இப்பதவிக்கு, தகுதியான உளவியல் மற்றும் ஆற்றுப்படுத்துதலில் முதுகலைப்பட்டம் பெற்ற நபர்கள் மேற்குறிப்பிட்ட பதவிக்கான விண்ணப்பம் மற்றும் தகவல்களை வேலூர் மாவட்ட ஆட்சியர் இணையத்தில் (http:/vellore.nic.in) பதிவிறக்கம் செய்து விண்ணப்பத்துடன் உரியசான்றுகளின் ஒளி நகலுடன் நாள்.12.10.2022 மாலை 5.45 மணிக்குள் கீழ்க்குறிப்பிட்டுள்ள முகவரிக்கு வந்து சேரும் வண்ணம் விண்ணப்பிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது. 12.10.2022 மாலை 5.45 மணிக்கு மேல் பெறப்படும் விண்ணப்பங்கள், முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் மற்றும் உரியசான்றுகள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் யாவும் முன் தகவிலின்றி நிராகரிக்கப்படும் தகுதியான நபர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் உளவில் மற்றும் ஆற்றுப்படுத்தல் வல்லுநர்கள் கொண்டு தேர்வுக்குழு மூலம் நேர்முகத் தேர்வு அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர். வேலூர் / இராணிப்பேட்டை மாவட்டங்களில் உள்ள தகுதியான நபர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பம் முன்னுரிமைக்கு எடுத்துக்கொள்ளப்படும்

தெரிவு செய்யப்படும் உளவில் / ஆற்றுப்படுத்துநர்களுக்கு வருகையின் அடிப்படையில் (ஒரு வருடத்திற்கு 60 நாட்களுக்கு மிகாமல் / வாரம் ஒருமுறை) மதிப்பூதியம் அடிப்படையில் ஒரு வருகைக்குப் போக்குவரத்து செலவு உட்பட ரூ.1000/– (ரூபாய் ஓராயிரம் மட்டும்) வழங்கப்படும், மேலும், விவரம் வேண்டுவோர் சம்பந்தப்பட்ட வேலூர் மாவட்ட நன்னடத்தை அலுவலரை தொடர்பு கொண்டு தெளிவு பெறலாம்.

ஒம்XXX

மாவட்ட ஆட்சியரின் ஆணைப்படி

28/9/2022

கண்காணிப்பாளர்,
அரசினர் பாதுகாப்பு இடம்,
வேலூர் – 632 012.

(பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய முகவரி)
நன்னடத்தை அலுவலர்,
மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு,
அண்ணாசாலை, (சுற்றுலா மாளிகை எதிரில்) வேலூர் – 632 001.
தொலைப்பேசி 0416 – 2222310.